# பொதுக்காலம் 6ம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

சீராக்கின் ஞான நூலிலிருந்து வாசகம் 15:15-20,

திருப்பாடல் 119: 1-2. 4-5. 17-18. 33-34,

திருத்தூதர் பவுல்கொரிந்தியருக்கு எழுதிய

முதலாம் திருமுகத்திலிருந்து வாசகம் . 2:6-10,

புனித மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: 5.17-37

## திருப்பலி முன்னுரை:

ஆண்டவரே! உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை நான் கண்டுணருமாறு என் கண்களைத் திறந்தருளும்.

இறைமகன் இயேசுவின் அன்பு மக்கள் அனைருக்கும் என் எளிய வாழ்த்துகள். கடவுளுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் ஆறாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இந்த நாள் ஞாயிறு வழிபாடு தன் அன்பு மக்களுக்கு இறைவன் வகுத்தளித்த ஒழுங்குகள் சார்பான கருத்துக்களை சற்றே ஆய்வு செய்ய தாய்த் திரு அவை நம்மை அழைக்கிறது. எப்படியும் வாழலாம் என்பதில்லை வாழ்வு. அதிலும் சிறப்பாக் கடவுளின் மக்கள் நாம் என்றால் அதற்கேற்ற இன்னும் சிறப்பான சில ஒழுங்கு முறைகளின் அடிப்படையில்தான் நாம் வாழ வேண்டும். அந்த ஒழுங்குகளைத் தன்மக்களுக்கென்று ஆண்டவரே வகுத்தளித்திருப்பதை சற்றே கூர்ந்து பார்த்து அது எத்தகையது என உணர்ந்து அதன்படி வாழ திரு அவை இன்று நம்மை அழைக்கிறது.

தம் சகோதரரையோ, சகோதரியையோ “அறிவிலியே“ என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார் என்று இயேசு எச்சரிக்கை விடுக்கிறார். உடல் முழுவதும் நரகத்தில் எறியப்படுவதை விட உங்கள் உறுப்புகளில் ஒன்றை நீங்கள் இழப்பதே நல்லது என கடுமையான அறிவுரையை அவர் நமக்கு வழங்குகிறார். எதன் மீதும் ஆணையிட வேண்டாம் என்றும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். “ஆம்“ என்றால் “ஆம்“ எனவும், “இல்லை“ என்றால் “இல்லை“ எனவும் உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனநிலையுடன் வாழ வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் திருச்சட்டத்தையும், இறைவாக்குகளையும் சரியாகப் புரிந்து கொண்டு அதன்படி வாழவும், பணியாற்றவும் அவர்களுடைய தீர்மானங்களும், முடிவுகளும் ஞானத்தோடும், விவேகத்தோடும் கூடியதாக அமையவும், அவர்களுக்கு வேண்டிய தெளிவைக் கொடுத்து அவர்களை வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வழிகாட்டும் ஒளியே இறைவா,**

உமது விதிமுறைகளை நாங்கள் முழு உள்ளத்தோடு இறுதிவரை கடைப்பிடித்து வாழவும். நல்லதையே செய்து உமது ஆசீரைப் பெற்றுக்கொள்ளும் நல்ல தெரிவுகளை மேற்கொள்ள வேண்டிய ஞானத்தை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழ்வின் வழியே இறைவா,**

கொலை, விபசாரம் போன்ற தீமைகளின் பிடியில் சிக்கி உமது திட்டத்துக்கு எதிராக செயல்படுவோர் அனைவருக்கும், தூய வாழ்வுக்கான வழியைக் காட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**மகிமையின் அரசரே இறைவா,**

உமது கட்டளைகளுக்கு எதிரான தீமைகளில் இருந்து விலகி புனித வாழ்வு வாழும் வரத்தை, எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரான தந்தையே இறைவா!**

எமது சிறுவர்களை நிறைவாக ஆசீர்வதித்து, அவர்கள் இறையுறவிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும் சிறந்து வளர்வதற்கு வேண்டிய ஆற்றலையும் அருளையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கீழ்ப்படிதலின் மகிமையை உம் திருக்குடும்பத்தின் வழியாக உணர்த்திய எம் இறைவா!**

எங்கள் குடும்பங்களில் இறைமகன் வாழ்ந்துக் காட்டிய அதே வழியை, நாங்களும் கடைபிடித்து, எங்கள் குடும்பங்கள் கோவிலாய் ஒளிர்ந்திட, எமக்கு சுயநலமற்ற அன்பும், அடுத்திருப்பவருடன் நட்பு பாராட்டும் நல்ல உள்ளங்களையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாதுகாப்பின் நாயகனே!**

எம் பங்கில் இருக்கின்ற நோயாளிகள், முதியவர்கள், கைவிடப்பட்டவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்து அவர்களை உமது அன்பில் திளைக்கவைக்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

www.tamilcatholicnews.com